கவிதை : மல்லிகையின் ஜீவா வாழ்க !

Written by - எம். ஜெயராமசர்மா .. மெல்பேண் .. அவுஸ்திரேலியா -
Wednesday, 21 June 2017 21:42 - Last Updated Wednesday, 21 June 2017 21:46

தொண்ணூறு வயதினைத் தொட்டுநிற்கும் ஜீவாவே
இன்னும் நீ வாழ்வதற்கு இறைவனிடம் வேண்டுகிறேன்
உன்னுடைய ஊக்கத்தால் உரம்பெற்று வளர்ந்தவர்கள்
உனைவாழ்த்தும் வாழ்த்தெல்லாம் உரமாக அமைந்திடட்டும் !

யாழ்நகர வீதிகளில் நீ நடந்த காட்சியெலாம்
வாழ்நாளில் சாதனையாய் மல்லிகையாய் மலர்ந்ததுவே
தாழ்வுதனை துணையாக்கி தலைநிமிர்ந்த உன் துணிவை
நாள்முழுக்க நினைந்தபடி நான்வாழ்த்தி மகிழுகின்றேன் ! பரிசுபல பெற்றாலும்
பகட்டின்றி வாழ்ந்துநின்றாய்
உரியவரை இனங்கண்டு உன்வழியில் இணைத்துநின்றாய்
வறுமையிலும் செம்மையாய் வாழ்வதற்குக் கற்றுக்கொண்டாய்
பொறுமையுடன் நீயிருந்து பொலிந்துவிட்டாய் படைப்புலகில் !

நல்லதமிழ் ஏடுதந்த நாயகனே நீ வாழ்க
நல்லதமிழ் எடுத்தாண்ட வல்லவனே நீ வாழ்க
மல்லிகையாய் மணங்கொடுத்த மன்னவனே நீ வாழ்க
மல்லிகையின் ஜீவாவே வாழ்ந்திடுக பல்லாண்டு !

jeyaramiyer@yahoo.com.au

1 / 1